# QB365 Question Bank Software Study Material

## வரலாறு - தொழிற்புரட்சி முக்கியமான 2,3 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்

## 9ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 64

**2 மதிப்பெண் வினாக்கள்**

12 x 2 = 24

1) தொழிற்புரட்சிக் காலம் எவ்வாறு மாத வரலாற்றை மாற்றி அமைத்தது?

**பதில் :** 1. பொருட்கள் கைகளால் உற்பத்தி செய்யப்பட்ட நிலை மாறி, இயந்திரங்களால் உற்பத்தி செய்யப்பட்டன.
2. இதனால் பொருட்களின் உற்பத்தி பன்மடங்கு அதிகரித்தது.
3. இது பொருளாதாரத்தில் மாற்றங்களை ஏற்படுத்தியதோடல்லாமல், சமூகத்திலும் அரசியலிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது.
4. அதுவரை வேளாண்மை, கைத்தொழில்கள் ஆகியவை சார்ந்து இயங்கிய பொருளாதாரம் தொழிற்புரட்சியைத் தொடர்ந்து தொழிற்சாலைகள் மற்றும் இயந்திர உற்பத்தியின் ஆதிக்கத்திற்கு உள்ளானது.

2) ஜவுளி ஆலைத் தொழிலில் சிறந்து விளங்கிய இங்கிலாந்து நகரங்கள் யாவை?

**பதில் :** 1. மான்செஸ்டர்
2. செஷையர்
3. யார்க்ஷையர்
4. டெர்பிஷையர்
5. ஸ்டாபோர்டுஷையர்
6. லங்காஷையா
7. நாட்டிங்காம்ஷையர்

3) தொழிற்புரட்சிக் காலம் என்பது யாது?

**பதில் :** (i) 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உற்பத்தி முறையில் ஏற்பட்ட மிகப் பெரிய மாற்றம் மனிதகுல வரலாற்றையே மாற்றி அமைத்தது.
(ii) இப்பரந்த மாறுதல் தொழிற்புரட்சிக் காலம் என்று அழைக்கப்படுகிறது.

4) தாமஸ் நியூகோமன் இங்கிலாந்தின் சுரங்க முதலாளிகளுக்கு எவ்வகையில் உதவி புரிந்தார்?

**பதில் :** (i) 18ஆம் நூற்றாண்டில் சுரங்கங்களில் அதிகரித்த நீர்க்கசிவு, இங்கிலாந்தில் சுரங்க முதலாளிகளுக்கு பெரும் இடையூறாக இருந்தது.
(ii) நிலக்கரியை வெட்டியெடுக்க நீரை வெளியேற்ற வேண்டியதாக இருந்தது. இதற்கென அவர்கள் கூடுதல் தொழிலாளர்களை வேலைக்கமர்த்தினர். இதனால் ஏராளமான பணம் செலவாகியது.
(iii) இக்கால கட்டத்தில்தான் தாமஸ் நியூகோமன் என்ற பிரிட்டிஷ் பொறியாளர் நீராவி, நிலக்கரி ஆகியனவற்றைப் பயன்படுத்தி சுரங்கங்களிலிருந்து நீரை வெளியேற்ற உதவும் புதுவகையான நீரேற்று இயந்திரம் ஒன்றைக் கண்டுபிடித்தார்.

5) ஜேம்ஸ் வாட்-இன் பங்களிப்பு என்ன?

**பதில் :** (i) ஸ்காட்லாந்து நாட்டைச் சேர்ந்த பொறியாளர் ஜேம்ஸ் வாட் நிலையாகப் பொருத்தப்பட்ட நீராவி இயந்திரத்தினைச் சுழலும் நீராவி இயந்திரமாக மாற்றியமைத்தார்.
(ii) இது குறைவான எரிபொருளைப் பயன்படுத்தியது.

6) காட்டன் ஜின் பற்றி சிறு குறிப்பு வரைக.

**பதில் :** (i) 1793இல் எலி விட்னி என்பவர் பருத்தியிலிருந்து கொட்டையைத் தனியாகப் பிரித்தெடுக்கும் காட்டன் ஜின் எனப்படும் பருத்திக் கொட்டையை நீக்கும் கருவியைக் கண்டுபிடித்தார்.
(ii) இது மனிதர்களை விடப் பலமடங்கு பருத்தியிலிருந்து கொட்டைகளைப் பிரித்து எடுத்தது.
(iii) இப்படி வேகமாகக் கொட்டைகளைப் பிரித்தெடுப்பது பஞ்சு உற்பத்தி வேகத்தை அதிகரிக்கச் செய்தது.

7) தொழிற்சங்கங்கள் உருவாக காரணங்கள் என்ன?

**பதில் :** தொழிற்சாலைகளில் நிலவிய மோசமான பணிச்சூழல், நீண்ட வேலை நேரம். குறைந்த கூலி பெண்களும் குழந்தைகளும் சுரண்டப்பட்டமை ஆகியன தொழிற்சங்கங்கள் உருவாக வழிவகுத்தன

[illegible]

8) மாபெரும் இருப்புப்பாதை வேலை நிறுத்தம் பற்றி குறிப்பு வரைக.

**பதில் :** (i) 1877-இல் அமெரிக்காவில் மாபெரும் இருப்புப்பாதை வேலை நிறுத்தம் வெடித்தது.
(ii) நீடித்த பொருளாதார மந்தம் காரணமாக தொழிலாளர்களின் ஊதியம் குறைக்கப்பட்டதால் இது ஏற்பட்டது.
(iii) இது மேற்கு வெர்ஜினியாவில் தொடங்கி, 45 நாட்களில் மேலும் 3 மாநிலங்களுக்குப் பரவியது.
(iv) முதலாளிகளின் அடியாட்கள், தேசியப் பாதுகாப்புப்படை, இராணுவம், கூலிப்படைகள் ஆகியனவற்றைக் கொண்டு இந்தப் போராட்டம் நசுக்கப்பட்டது.

9) சாசன இயக்கம் பற்றி கூறுக.

**பதில் :** 1. விரக்தியுற்ற உழைக்கும் வர்க்கம் லட்சக்கணக்கில் ஓரிடத்தில் கூடி தங்கள் கோரிக்கைகள் அடங்கிய ஒரு சாசனத்தை உருவாக்கி பல லட்சம் சக தொழிலாளர்களின் கையொப்பம் பெற்றது.
2. இந்தசாசனம் இங்கிலாந்து நாடாளுமன்றத்தின் கீழவையான மக்கள் அவையில் தாக்கல் செய்யப்பட்டது.
3. அதில் கூறப்பட்டுள்ள கோரிக்கைகளைத் தொழிலாளர் இயக்கம் வலியுறுத்தியதால் அது சாசன இயக்கம் என அழைக்கப்பட்டனர்.

10) சுரங்கங்கள் அறிக்கை என்றால் என்ன?

**பதில் :** 1. 1842 இல் பிரிட்டிஷ் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை சுரங்கங்கள் அறிக்கை எனப்பட்டது.
2. அதில் ஐந்து வயதிற்குக் குறைந்த சிறார்கள் மறைமுகமாக வேலைக்கு அமர்த்தப்பட்டு ரகசியமாக வேலை வாங்கப்பட்டதாகவும் இவ்வாறு நாளொன்றுக்கு 12 மணி நேரம் உழைக்க 2 பென்னி மட்டுமே கூலியாகத் தரப்பட்டதாகவும், வயதில் மூத்த பெண் சிறார்கள் நிலக்கரி கூடைகள் சுமந்ததாகவும் அதனால் உடல்வளர்ச்சி குறைபாடுகள் ஏற்பட்டதாகவும் அந்த அறிக்கைக் கூறியிருந்தது.

11) ஜெர்மனியின் வடக்கடலில் இருந்த பாதுகாப்பான துறைமுகங்கள் எவை?

**பதில் :** பிரெமன், ஹாம்பர்க் ஆகிய இரு பெரிய துறைமுகங்கள் வடக் கடலில் இருந்த பாதுகாப்பான துறைமுகங்கள் ஆகும்.

12) கார்டெல் என்றால் என்ன?

**பதில் :** போட்டிகளைக் கட்டுப்படுத்தவும் விலை உயர்வைத் தக்கவைக்கவும் உற்பத்தியாளர்கள் அல்லது விநியோகிப்பாளர்கள் ஏற்படுத்திக் கொள்ளும் கூட்டமைப்பே கார்டெல் ஆகும்.

## <u>3 மதிப்பெண் வினாக்கள்</u> 5 x 3 = 15

13) தொழிற்புரட்சியின் போது இங்கிலாந்தில் தொழிலார்களின் வாழ்விடங்களில் நிலை எவ்வாறு இருந்தன?

**பதில் :** தொழிலாளர்கள் மிகவும் சிறிய, அழுக்கடைந்த, சுகாதாரமற்ற வீடுகளில் வாழ்ந்தனர். தொழிலாளர்கள் சுற்றுப்புறத்தைச் சுத்தப்படுத்தவோ மாற்றவோ அவர்களுக்கு நேரம் இருக்கவில்லை. இதனால் டைஃபாயிடு, காலரா, பெரியம்மை போன்ற நோய்கள் பரவின.

14) இங்கிலாந்தில் நகரமயமாதலுக்கான காரணங்களைளைக் கூறு.

**பதில் :** தொழிற்புரட்சியின் வருகையைத் தொடர்ந்து, உலகின் தொழிற்பட்டறையாக இங்கிலாந்து மாறியது. வேளாண்மை உற்பத்தியில் பொதுவான வீழ்ச்சி காணப்பட்டது. இதனால் மக்கள் கிராமங்களிலிருந்து தொழில் நகரங்களை நோக்கிச் செல்லத் தொடங்கினர். மக்கள்தொகை அதிகரிப்பு, இடப்பெயர்ச்சி. நகரமயமாக்கம் ஆகியன முக்கிய காரணங்கள் ஆகும்.

15) ஹே மார்க்கெட் படுகொலை பற்றிக் குறிப்பு வரைக.

**பதில் :** சிகாகோவின் ஹே மார்க்கெட் சதுக்கத்தில் 1886 மே மாதம் 4 ஆம் தேதி ஒரு தொழிலாளர் ஆர்ப்பாட்டம் நடந்தது.நாளொன்றுக்கு எட்டு மணிநேர வேலை கோரிக்கையை முன்வைத்து அமைதியாகத் தொடங்கிய இக்கூட்டத்தில் காவல்துறை பல சுற்றுகள் துப்பாக்கிச் சூடு நடத்திப் பலரைக் கொன்றது.ஹேமார்க்கெட் தியாகிகளுக்கு மரியாதை செலுத்தும் விதமாக மே 1ஆம் நாள் இன்றளவும் சர்வதேச தொழிலாளர் நாளாகக் (மே தினம்) கடைபிடிக்கப்படுகிறது.

16) லூயி ரெனால்ட் பற்றி நீங்கள் அறிந்தது என்னன்ன?

**பதில் :** 1898இல் லூயி ரெனால்ட் என்பவர் நான்கு சக்கர வாகனத்தை உருவாக்கினார். தொடர்ந்து சொசைட்டெ ரெனால்ட் ஃபெரெர்ஸ் (ரெனால்ட் சகோதரர்கள் நிறுவனம்) தனது நிறுவனத்தின் மூலம் அதிக எண்ணிக்கையில் வாகனங்களைத் தயாரித்தார்.

17) தொழிற்புரட்சியின் இரு முக்கிய விளைவுகளைக் கோடிட்டுக் காட்டுக.

**பதில் :** தொழிற்புரட்சியினால் மனிதன் இயந்திரங்களுக்கு அடிமையானான்.
(ii) ஆலைத் தொழிலாளிகள் இரக்கமின்றி முதலாளிகளால் சுரண்டப்பட்டனர்.
(iii) பெண்களும், சிறுவர்களும் குறைவான ஊதியத்தில் மற்றும் பாதுகாப்பில்லாத, அபாயகரமான இயந்திரங்களுக்கு அருகேயும் பணிபுரிய வேண்டியிருந்தது.
(iv) வேலையில்லாத் திண்டாட்டம் ஒரு தீவிர பிரச்சனையாய் இருந்தது.

**5 மதிப்பெண் வினாக்கள்** 5 x 5 = 25

18) அமெரிக்காவில் இரண்டாவது தொழிற்புரட்சி நடைபெற்றதற்கான காரணங்களை வரிசைப்படுத்துக.

**பதில் : அமெரிக்காவில் இரண்டாவது தொழிற்புரட்சிக்கான காரணங்கள் :**
i) இங்கிலாந்தைச் சேர்ந்த சாமுவேல் சிலேட்டர் 10வயதில் இருந்து ஜவுளி ஆலைகளில் பணியாற்றி ஒரு ஆலையை நிர்வகிக்கும் அளவுக்கு அனுபவம் பெற்றிருந்தார்.
(ii) அமெரிக்கர்கள் புதிய தொழில்நுட்பங்களில் ஆர்வம் காட்டுகிறார்கள் என்றவுடன் இவர் 1789-ல் அமெரிக்காவின் நியூயார்க்கில் சட்டவிரோதமாக குடியேறினார்.
(iii) ரோட்ஸ் தீவின் புகழ்பெற்ற தொழிலதிபர் மோசஸ் பிரௌனிடம் வேலைக்கு சேர்ந்து கொண்டதும் அவரது ஆலை 1793இல் மீண்டும் இயங்கத் தொடங்கியது.
(iv) இது அமெரிக்க நாடுகளில் நீராற்றலின் மூலம் இயங்கிய முதல் ஜவுளி ஆலை ஆகும்.
(v) 1800 வாக்கில், சிலேட்டரின் துணி ஆலையினைக் கண்டு மேலும் பலர் துணி ஆலைகள் தொடங்கி வளமடைந்தனர்.
(vi) அமெரிக்க அதிபர் ஆண்ட்ரு ஜாக்சன், சிலேட்டரை "அமெரிக்கத் தொழிற்புரட்சியின் தந்தை' என்று புகழ்ந்தார்.
(vii) ராபர்ட் ஃபுல்டன் என்பவர் ஹட்சன் நதியில் நீராவிப் படகு போக்குவரத்தை தொடங்கினார்.
(viii) சாமுவேல் மோர்ஸ் தந்தியைக் கண்டுபிடித்ததும், எலியாஸ் ஹோவே தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்தார்.
(ix) 1869-ல் கண்டங்களை இணைக்கும் முதல் ரயில்பாதை அமைக்கப்பட்டது.
(x) இரயில் போக்குவரத்து மக்கள், சரக்கு மற்றும் மூலப்பொருட்களை எடுத்து செல்வதற்கு பயன்பட்டது.
(xi) தாமஸ் ஆல்வா எடிசன் கண்டுபிடித்த மின்விளக்கு (1879) அலெக்ஸாண்டர் கிரஹாம்பெல் தொலைபேசி கண்டுபிடித்தார் (1888). இப்புதிய கண்டுபிடிப்புகள், போக்குவரத்து மற்றும் தொழிற்சாலைகள் அமைத்தல் போன்றவை அமெரிக்காவில் இரண்டாவது தொழிற்புரட்சிக்கு அடிகோலியது.

19) இங்கிலாந்தின் தொழிற்புரட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் யாவை?

**பதில் : இங்கிலாந்து தொழிற்புரட்சியினால் இந்தியாவில் ஏற்பட்ட விளைவுகள் :**
(i)18ம் நூற்றாண்டின் முதல் கால் பகுதியில் இங்கிலாந்தில் குவிக்கப்பட்ட இந்தியப் பருத்தி இழைத் துணிகளுக்கும் பட்டு ஆடைகளுக்கும் தடைவிதித்தும் இங்கிலாந்தில் சட்டம் இயற்றப்பட்டது.
(ii) நூற்பு நெசவுத் தொழில் ஆகியன இங்கிலாந்தில் பெரும் வளர்ச்சியடைந்தன.
(iii) வங்கத்தைச் சேர்ந்த நெசவாளர்கள் கிழக்கிந்தியக் கம்பெனி அதிகாரிகள் மற்றும் அவர்களின் ஏஜெண்டு கரங்களில் சிக்கிப் பெரும் துன்பத்திற்கு ஆளாயினர்.
(iv) உற்பத்திப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு போக்குவரத்து தீர்வை செலுத்த வேண்டும் என்று கட்டாயப்படுத்தினர்.
(v) இங்கிலாந்தின் தொழிற்சாலைகளுக்குத் தேவைப்படும் வணிகப் பயிர்களை மட்டும் சாகுபடி செய்ய வற்புறுத்தினர். மேலும் இங்கிலாந்தில் உற்பத்தி செய்யப்பட்ட பருத்தி ஆடைகளை இந்தியச் சந்தைகளில் குவித்தனர்.
(vi) கைத்தறியில் நெய்யப்பட்ட பருத்தி ஆடைகளுக்கான சந்தை இழப்பால் இந்தியா பண்டைய உற்பத்தித் துறையில் வகித்து வந்திருந்த இடத்தை இழந்துவிட்டது.
(vii) இந்திய நாடு மூலப்பொருள்களை ஏற்றுமதி செய்யும் நாடாக மாறியது.
(viii) 19ம் நூற்றாண்டில் முதல் கால் பகுதியில் டாக்கா மஸ்லின் துணி இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்வது நிறுத்தப்பட்டது.
(ix) பிரிட்டன் துணி ஆலைகளில் உற்பத்தியான துணிகள் இந்தியச் சந்தைகளில் குறைவான விலைக்கு விற்கப்பட்டது.
(x) எனவே இந்திய நெசவாளர்கள் வேலையற்றுத் தங்கள் வாழ்வாதாரத்தை இழந்து உணவுக்கும் வழியற்றவர்கள் ஆயினர்.

20) இங்கிலாந்தில் தொழிற்புரட்சியால் விளைந்த பலன்கள் யாவை?

**பதில் :** 1. இங்கிலாந்து நாட்டில் ஏற்பட்ட தொழிற்புரட்சி, வணிக விரிவாக்கம், உணவு உற்பத்தி அதிகரிப்புக்கு இட்டுச் சென்றது.

2. ஆலைத் தொழிலாளர்கள் எனும் ஒரு புதிய வர்க்கம் உருவாகியது.

3. நகரமயமாக்கம் எனும் வளர்ச்சிப் போக்குகளுக்கு இட்டுச் சென்றது.

4. புதிய நகரங்கள் உருவாகி வளர்ந்தன.

5. இங்கிலாந்து நாட்டில் சாலை, இரயில் போக்குவரத்து வசதிகள் மேம்பட்டன.

6. நீர்வழிப் போக்குவரத்து வசதிகள் பெருகின.

7. தொழிலாளர்கள் இயக்கம் தோன்றியது.

8. தொழிலாளர்களுக்கு வாக்குரிமை கோருதல், தொழிற்சாலைகளில் பணியாற்றும் தொழிலாளர்களின் பணி நிலைமைகளை முறைப்படுத்தக் கோருதல் ஆகிய சமூக நிலைகள் அரசியலில் ஒரு புதிய சக்தியை உருவாக்கின.

21) பிரான்ஸ் நாட்டில் நிகழ்ந்த தொழிற்புரட்சியைப் பற்றி விவரி.

**பதில் : பிரான்ஸ் நாட்டில் நடந்த தொழிற்புரட்சி :**

(i) இங்கிலாந்து பெற்றிருந்ததைப் போன்று பிரான்ஸ் இயற்கை வளங்களைப் பெற்றிருக்கவில்லை.

(ii) பிரெஞ்சுப் புரட்சி, நெப்போலியன் மேற்கொண்ட நீண்டகாலப் போர்கள் ஆகியனவற்றின் விளைவாக ஏற்பட்ட அரசியல் நிலையற்ற தன்மை நாட்டைச் சீரழித்திருந்தது.

(iii) புரட்சியின் போது பிரான்ஸ் நாட்டின் வணிகர்கள் பலரும் இங்கிலாந்தில் அடைக்கலம் புகுந்திருந்தனர்.

(iv) அவர்கள் நெப்போலியப் போர்கள் முடிவுக்கு வந்த பின்னர் பிரான்ஸ் திரும்பிய போது பிரிட்டிஷ் தொழில்நுட்பங்களையும் கொண்டு வந்து பயன்படுத்தினர்.

(v) இது அவர்களது நாட்டில் தொழிற்புரட்சியை நிறைவேற்ற உதவியது.

(vi) பிரிட்டனில் தயாரிக்கப்பட்ட நூற்புக்கதிர்களைப் பயன்படுத்தியதால், 1830-1860 காலகட்டத்தில் பிரான்சின் ஜவுளி உற்பத்தி இரண்டு மடங்காக அதிகரித்தது. (vii) பிரான்ஸ்வா டி வெண்டல் என்பவர் பிரிட்டிஷ் தொழில்நுட்பத்தை லொரைனுக்குக் கொண்டு வந்தார்.

(viii) அவரது குடும்பம் நிலக்கரிச் சுரங்கத்தில் நீராவி இயந்திரத்தையும், இரும்பைப் பிரித்தெடுப்பதில் துழாவும் உலையையும் (Puddling Kiln) பிரான்சில் அறிமுகம் செய்தது.

(ix) அல்சாஸ் மாகாணத்தின் முல்ஹவுஸ் நகரம் இயந்திரம் செய்வதற்கான அச்சுகளால் புகழ் பெற்றது.

(x) செயிண்ட் - சாமோண்டில் இரும்பு உற்பத்தியில் முன்னேற்றம் ஏற்பட்டது.

(xi) 1832இல் பிரான்ஸ் நாட்டின் செயின்ட் இடியன் - ஆந்திரிஜியோக்ஸ் ஆகிய நகரங்களுக்கிடையே முதல் பிரெஞ்சு ரயில்பாதை திறக்கப்பட்டது.

(xii) 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாகன உற்பத்தியில் பிரான்ஸ் முன்னோடி நாடாக வளர்ந்தது.

22) ஜெர்மனி ஒரே நாடாக ஒருங்கிணைய இருப்புப்பாதைகள் எவ்வாறு பயன்பட்டன என்பதை விளக்குக.

**பதில் :** (i) ஜெர்மனியில் தொழிற்புரட்சி உருவாவதிலும் ஜெர்மனி ஒரே நாடாக ஒருங்கிணைவதிலும் இருப்புப் பாதைகள் பெரிதும் உதவின.

(ii) 1835 டிசம்பரில் நியூ ரெம்பர்க், ஃபர்த் நகரங்களுக்கிடையே முதல் இருப்புப்பாதை அமைக்கப்பட்டது.

(iii) இருப்புப்பாதைகள் அமைப்பதில் தனியார் துறை முன்முயற்சி எடுத்தது.

(iv) ஆனால், மூலதனப் பற்றாக்குறை எழுந்தபோது அரசாங்கம் தலையிட்டு உதவியது.

(v) சில பகுதிகளில் இருப்புப்பாதை அமைக்கும் பணி தேசியமயமாக்கப்பட்டது.

(vi) பிரஷ்யாவில் இருப்புப்பாதைகளை ஒருங்கிணைக்கும் பணியை அரசே முன்முயற்சி எடுத்து, தனியார் நிறுவனங்களுடன் இணைந்து செயல்படுத்தியது.

(vii) 1842இல் இருப்புப்பாதை அமைக்கும் திட்டத்திற்கென்றே ரயில்வே நிதி எனத் தனி நிதி உருவாக்கப்பட்டது.

(vill) பிரெஷ்யாவில் ஒருங்கிணைந்த இருப்புப்பாதை மையமாக பெர்லின் நகரம் உருவானது.

(ix) ஜோல்வேரெய்ன் ஒன்றியத்தின் உறுப்பு நாடுகள் இருப்புப்பாதைகளால் இணைக்கப்பட்டதால் வணிக, வர்த்தக நடவடிக்கைகள் தீவிரமடைந்தன.